செ.வெ.எண்: 21 நாள்: 15.08.2020

**கோயம்புத்தூர் மாவட்டம்**

## 74வது சுதந்திரதின விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கு.இராசாமணி இ.ஆ.ப., அவர்கள் தேசிய கொடியினை ஏற்றி வைத்து, மரியாதை செலுத்தினார்.

கோயம்புத்தூர் மாவட்டம், வ.உ.சி மைதானத்தில் இன்று (15.08.2020) 74வது சுதந்திர தின விழா நடைபெற்றது. இவ்விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கு.இராசாமணி இ.ஆ.ப., அவர்கள் தேசியக் கொடியினை ஏற்றிவைத்து காவல்துறை அணிவகுப்பை பார்வையிட்டு கொரோனா வைரஸ் தொற்று தடுப்பில் சிறப்பாக பணியாற்றிய முன்களப்பணியாளர்களை கௌரவித்தார்.

இவ்விழாவில், கோவை மாநகர காவல் ஆணையர் திரு.சுமித்சரண், இ.கா.ப., மேற்கு மண்டல காவல்துறை தலைவர் திரு.பெரியய்யா இ.கா.ப., மேற்கு மண்டல காவல்துறை துணைத்தலைவர் திரு.கே.எஸ்.நரேந்திரநாயர், இ.கா.ப., மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.அர.அருளரசு இ.கா.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திரு.இராமதுரைமுருகன், மாநகர காவல் துணை ஆணையர் திரு.கோ.ஸ்டாலின், மாவட்ட ஊரக வளாச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.ரமேஷ்குமார் வருவாய் கோட்டாட்சியர்கள் திரு.தனலிங்கம், திரு.சுரேஷ், அரசு மருத்துவக்கல்லூரி முதல்வர் திரு.காளாதாசு, இ.எஸ்.ஐ மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு.நிர்மலா, இணை இயக்குநர் (மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள்) மரு.கிருஷ்ணா, துணை இயக்குநர் மரு.ரமேஷ்குமார் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

முன்னதாக காலை 8.50 மணியளவில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கு.இராசாமணி இ.ஆ.ப., அவர்கள் தேசியக்கொடியினை ஏற்றிவைத்து மரியாதை செலுத்தினார்கள். அதனைத்தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் காவல்துறை அணிவகுப்பினை பார்வையிட்டார்.

அதனைத்தொடர்ந்து, அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை முதல்வர், இ.எஸ்.ஐ மருத்துவ கல்லூரி மருத்துவமனை முதல்வர், துணை இயக்குநர்(சுகாதாரப்பணிகள்), வருவாய் கோட்டாட்சியர்கள், வட்டார போக்குவரத்து அலுவலர்(மையம்), காவல் துறை அலுவலர்கள் உள்ளிட்ட அலுவலர்களுடன், அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையை சேர்ந்த 7 நபர்கள், இ.எஸ்.ஐ மருத்துவகல்லூரி மருத்துவமனையை சேர்ந்த 06 நபர்கள், துணை இயக்குநர், சுகாதாரப்பணிகள் துறையைச் சேர்ந்த 10 நபர்கள், இணை இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் துறை சேர்ந்த 05 நபர்கள், மாநகர காவல் ஆணையர் அலுவலகத்தை சேர்ந்த 10 காவலர்கள், காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தை சேர்ந்த 05 காவலர்கள், மாநகராட்சி அலுவலகத்ததை சேர்ந்த 08 நபர்கள், பொள்ளாச்சி, வால்பாறை, மேட்டுப்பாளையம் ஆகிய மூன்று நகராட்சிகளை சேர்ந்த 06 நபர்கள், பேரூராட்சிகள் துறையைச் சேர்ந்த 06 நபர்கள், ஊரக வளர்ச்சித்துறையை சேர்ந்த 05 நபர்கள், வட்டார போக்குவரத்து அலுவலகத்தை சேர்ந்த 01 நபர், உணவுப்பாதுகாப்புத் துறையைச் சேர்ந்த 01 நபர், மற்றும் வருவாய்த்துறையைச் சேர்ந்த 20 நபர்கள் என மொத்தம் 90 நபர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று தடுப்பில் சிறப்பாக பணியாற்றியதற்கு நற்சான்றிதழ்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கு.இராசாமணி இ.ஆ.ப., அவர்கள் வழங்கி சிறப்பித்தார்கள்.

மேலும், சுதந்திர போராட்ட தியாகிகள் மற்றும் வாரிசுதாரர்களை கௌரவிக்கும் பொருட்டு அவரவர் வீட்டிலேயே, சம்பந்தப்பட்ட வட்டாட்சியர் மற்றும் துணை வட்டாட்சியர் நிலையில் உள்ள அலுவலர்கள் பொன்னாடை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கோயம்புத்தூர்.**